அசல் வழக்கு எண். 193/2022 வா.சா.1 பூவேல் த/பெ பாலசுந்தரம்

**18.04.2024 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. 1ம் பிரதிவாதி என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 2ம் வாதி மற்றும் 3ம் வாதி என் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். நான் பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. என்அப்பா பெயர் பாலசுந்தரம் ஆகும். என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தான் நான் பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் அப்பாவிற்கு எத்தனை ஏக்கர் சொத்து முழுமையாக பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு எத்தனை ஏக்கர் சொத்தில் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுவும் எனக்கு தெரியாது.

3. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள முழு விவரங்களும் எனக்கு தெரியும். என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2ம் பத்தியில் பழைய நிலங்கள் அதனால் சொத்தின் பத்திரங்கள் அறிய முடியவில்லை என்றும் கண்டறிந்தால் விசாரணையின் போது தாக்கல் செய்யப்படும் என உறுதி அளிக்கிறேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நான் உறுதி அளித்தவாறு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரையில் இல்லை. நான் சொல்லி உள்ளபழைய நிலங்கள் எந்த சொத்திற்கு உரியது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 3ம் பத்தியில் பாலசுந்தரம் அவர்கள் எந்த ஏற்பாடும் செய்யாமலும், செய்ய முடியாமலும் வாத நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டு சுமார் 4,5 ஆண்டுகள் படுத்த படுக்கையாக இருந்து கடந்த 2017ம்ஆண்டு அவரின் 80வது வயதில் காலமாகி விட்டார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியாது.

5. என்அப்பா பாலசுந்தரம் உயிருடன் இருந்தபோது வழக்கு சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி வெங்கடேசன் பெயரில் 27.11.2014 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் நான் என் வழக்குரையின் 5ம் பத்தியில் 27.11.2019 தேதியிட்ட ஆவண எண்.8900 முன்னிலைக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்கப்பட்டது என்று சொல்லி உள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு 27.11.2014 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வழக்கில் என் தரப்பில் வா.சா.ஆ.3 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. வா.சா.ஆ.3 முன்னிலைக்கு 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சொத்தை 1ம் பிரதிவாதி தனது மகனுக்கு 04.01.2022 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திர முன்னிலைக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த 04.01.2022 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வழக்கில் என்தரப்பில் வா.சா.ஆ.4 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றியும் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தனது மகனுக்கு வா.சா.ஆ.4 முன்னிலைக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரத்தையும் என் வழக்குரை 5ம் பத்தியில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.

7. என் அப்பா பாலசுந்தரம் உயிருடன் இருந்த சமயத்தில் தனது சொத்தின் ஒரு பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.3 முன்னிலைக்கு எழுதிவைத்தது சட்டப்படி செல்லும் என்றும் அவ்வாறு செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்ட சொத்தில் நான்

பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

8. தாவாவில் என்அப்பா 1ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த வா.சா.ஆ.3 தான செட்டில்மென்ட் பத்திரம் பற்றியும் அதன்பின்னிட்டு 1ம் பிரதிவாதி தனது மகன் மணிகண்டனுக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரம் பற்றியும் தெரியும் என்று வழக்குரை 5ம் பத்தியில் சொல்லிவிட்டு 1ம் பிரதிவாதியின் மகன் மணிகண்டன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு பிழையுடைய வழக்கு என்று சொன்னால் எனக்கு தெரியாது

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)